


# சேலம் மாநகராட்சி

## நிதி நிலை அறிக்கை

## 2009 - 2010

# சேலம் மாநகராட்சி

## 2009–2010ஆம் ஆண்டுக்கான
## நிதி நிலை அறிக்கை

**வணக்கத்திற்குரிய சேலம் மாநகராட்சி மேயர்**

**திருமதி. ஜெ.ரேகா பிரியதர்ஷினி, எம்.ஏ., எம்.பில்.,**

**அவர்களின்**

**2009–2010ஆம் ஆண்டிற்கான**

**சேலம் மாநகராட்சியின்**

**நிதி நிலை அறிக்கை மீதான உரை**

சேலம் மாநகராட்சியின் 2009–2010ஆம் நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்யும் இந்த சிறப்புமிகு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைவருக்கும் என் பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறங்கிக் கிடந்த தமிழினத்தை உசுப்பிவிட்டு
உயிரான தமிழ் உணர்வை ஊட்டி விட்டவர் !
பகுத்தறிவுப் பகலவனாம் அய்யா தந்தை பெரியாரை
பாசம் நிறை தலைவராக ஏற்றுக் கொண்டவர் !
அன்பிற்கும் அறிவிற்கும் இலக்கணமாய் திகழ்ந்த
அண்ணாவின் தளபதியாய் எழுச்சிக் கண்டவர் !
ஈரேழு வயதினிலே தமிழ்க்கொடியை ஏந்தி நின்று
இன்று வரை வீழாமல் காத்து நிற்பவர் !
அந்த தமிழினத்தின் ஒப்பற்ற ஒரே தலைவர் –

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின்**

வழியில் வாட்டம் கொண்ட குழந்தையின் முகம் நோக்கி, கேளாமலே அமுது படைக்கும் அன்னையின் நிலைநின்று தீட்டப்படும் திட்டங்களுக்கு வேண்டிய நிதியை தாயுள்ளத்தோடு வழங்கி இந்த மாநகராட்சியை காத்து வருகின்ற

**மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தளபதியார் அவர்களின்**

நல்லாசியுடனும், சேலம் மாநகரத்தின் வளர்ச்சியில் ஒவ்வொரு அங்குலத்திலும் தனது உழைப்பைத் தந்து, உடல், பொருள், ஆவி என அனைத்திலும் மக்களின் மேன்மையை பற்றி, தொலைநோக்கு பார்வையுடன் சிந்தித்து செயல்பட்டு வருகின்ற

**மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு வீரபாண்டியார் அவர்களின்**

வழிகாட்டுதல்படியும் சேலம் மாநகராட்சியின் 2009–2010ஆம் நிதியாண்டிற்கான நிதி நிலை அறிக்கையை பணிவுடன் தாக்கல் செய்கிறேன்.

இந்த மாநகர மக்களின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றுகின்ற வகையில் கடந்த ஆண்டுகளில் திட்டமிட்டு செயல்படுத்திக் கொண்டிருக்கும் பணிகளுக்கும், வருங்காலத்தில் திட்டமிடப்பட்டிருக்கும் இதர பணிகளுக்கும், மாநகராட்சி நிதி ஆதாரங்கள், நடுவண் அரசின் நிதி, மாநில அரசின் நிதி இது தவிர நடுவண் அரசு மற்றும் மாநில அரசுகளின் சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து பெறப்படவிருக்கும் நிதி ஆதாரங்கள் போன்ற விவரங்களை இம்மாமன்றத்தின் முன் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

**“இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்**
**தான்கண்டு அனைத்து இவ்வுலகு”**

என்ற அய்யன் வள்ளுவர் வழியில் இந்த மாநகர மக்களுக்கு வேண்டியதை வழங்கி காக்கும் நோக்கோடு ஒப்பற்றத் தமிழினத் தலைவர்

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்**
**மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தளபதியார் அவர்கள்**
மாவட்ட மக்கள் காவலர் **மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டியார் அவர்கள்**

ஆகியோரின் நல்லாசிகளோடு 2008–2009ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதி நிலை அறிக்கையையும், 2009–2010ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையையும் இம்மாமன்றத்தின் முன் பணிவுடன் தாக்கல் செய்கிறேன்.

# சேலம் மாநகராட்சி

# 2008–2009ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்

## வருவாய் கணக்கு

| வ. எண் | விபரம் | வரவுகள் (ரூபாய் இலட்சத்தில்) | வ. எண். | விபரம் | செலவுகள் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | சொத்து வரி | 1,975.00 | 1 | மொத்த நிர்வாகச் செலவு | 4,034.26 |
| 2 | தொழில் வரி | 250.00 | 2 | பொது நிர்வாகப் பணிகள் | 3,000.00 |
| 3 | கேளிக்கை வரி | 180.00 | 3 | குடிநீர் பராமரிப்பு | 1,467.00 |
| 4 | முத்திரைக்கட்டணம் | 975.00 | 4 | தெரு விளக்கு பராமரிப்பு | 612.19 |
| 5 | சொத்துக்கள் மூலம் வரவு | 700.00 | 5 | பொது சுகாதாரம் மற்றும் மலேரியா | 614.34 |
| 6 | குடிநீர் விநியோக வரவு | 1,700.00 | 6 | கல்வி | 112.97 |
| 7 | குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை | 220.00 | 7 | நூலக வரி | 90.00 |
| 8 | கட்டணங்கள் மூலம் வரவு | 510.00 | 8 | வாகனங்கள் பராமரிப்பு | 284.24 |
| 9 | அரசு நிதி உதவி மற்றும் மான்யம் | 3,550.00 | 9 | கட்டடங்கள் பராமரிப்பு | 50.00 |
| 10 | இதர வரவுகள் | 272.00 | 10 | இதர செலவுகள் | 67.00 |
| | மொத்த வரவினம் | 10,332.00 | | மொத்த செலவினம் | 10,332.00 |

# சேலம் மாநகராட்சி
# 2008–2009ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்
# மூலதனக் கணக்கு

| வ. எண் | விபரம் | வரவுகள் (ரூபாய் இலட்சத்தில்) | வ. எண். | விபரம் | செலவுகள் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | நமக்கு நாமே திட்டம் | 9.60 | 1 | பொது பணிகள் (சிறப்பு சாலை பணிகள்) | 410.00 |
| 2 | வெள்ள நிவாரணம் | 14.60 | 2 | நமக்கு நாமே திட்டம் | 9.60 |
| 3 | சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மான்யம் | 164.40 | 3 | சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மான்யம் | 104.00 |
| 4 | மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி பணி ஊக்க நிதி | 51.40 | 4 | மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி பணி ஊக்க நிதி | – |
| 5 | வாம்பே திட்டம் | – | 5 | வெள்ள நிவாரணம் | 14.47 |
| 6 | மழைநீர் சேகரிப்பு மான்யம் | – | 6 | வாம்பே குடியிருப்பு | 22.52 |
| 7 | குடிநீர் விநியோகம் | 100.00 | 7 | மழைநீர் சேகரிப்பு பணிகள் | – |
| 8 | திடக்கழிவு மேலாண்மை 12வது நிதிக் குழு | 153.00 | 8 | குடிநீர் வழங்கல் திட்டம் | 100.00 |
| 9 | திருமணி முத்தாறு திட்டம்– நிலை 2 | 600.00 | 9 | திடக்கழிவு மேலாண்மை | 153.00 |
| 10 | பாதாள சாக்கடை திட்டம் | – | 10 | திருமணிமுத்தாறு திட்டம் | 500.00 |
| 11 | தனிக்குடிநீர் திட்டம் | 500.00 | 11 | பாதாள சாக்கடை திட்டம் | – |
| 12 | 12வது நிதிக் குழு அடிப்படை வசதிகள், மின்கட்டணம், கணினி டேட்டாஸ் | 153.00 | 12 | 12வது நிதிக் குழு அடிப்படை வசதிகள், மின்கட்டணம், கணினி டேட்டாஸ் | 153.00 |
| 13 | இடுகாடு, சுடுகாடு, தகனமேடை | – | 13 | தனிக்குடிநீர் திட்டம் | – |
| 14 | நவீன இறைச்சிக்கூடம் | – | 14 | நவீன இறைச்சிக்கூடம் | 35.00 |
| 15 | ஐ.எச்.எஸ்.டி.பி | – | 15 | ஐ.எச்.எஸ்.டி.பி | – |
| 16 | யு.ஐ.டி.எஸ்.எஸ்.எம்.டி. | – | 16 | யு.ஐ.டி.எஸ்.எஸ்.எம்.டி. | |
| 17 | போக்குவரத்து அபிவிருத்தி (CTTS) திட்டம் | – | 17 | போக்குவரத்து அபிவிருத்தி (CTTS) திட்டம் | 25.00 |
| 18 | பேருந்து நிலைய அபிவிருத்தி மானியம் | 100.00 | 18 | பேருந்து நிலைய அபிவிருத்தி மானியம் | 125.00 |
| 19 | முன்பணம் | 176.00 | 19 | கல்வி | 10.00 |
| 20 | வைப்புத்தொகை | 262.00 | 20 | தெருவிளக்கு | 126.00 |
| 21 | பகுதி II திட்டம் | 56.00 | 21 | கடன் திருப்பி செலுத்துதல் | 290.00 |
| | | | 22 | முன்பணம் | 170.00 |
| | | | 23 | இடுகாடு, சுடுகாடு, தகனமேடை | 15.00 |
| | | | 24 | வைப்புத்தொகை | 77.41 |
| | மொத்தம் | 2,340.00 | | மொத்தம் | 2,340.00 |
| | **ஆக மொத்தம்** | **12,672.00** | | **ஆக மொத்தம்** | **12,672.00** |

# சேலம் மாநகராட்சி

## 2009–2010ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு

## வருவாய் கணக்கு

| வ. எண் | விபரம் | வரவுகள் (ரூபாய் இலட்சத்தில்) | வ. எண். | விபரம் | செலவுகள் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | சொத்து வரி | 2,300.00 | 1 | மொத்த நிர்வாகச் செலவு | 4,500.00 |
| 2 | தொழில் வரி | 300.00 | 2 | பொது நிர்வாகப் பணிகள் | 3,500.00 |
| 3 | கேளிக்கை வரி | 200.00 | 3 | குடிநீர் பராமரிப்பு | 1,650.00 |
| 4 | முத்திரைக்கட்டணம் | 1,000.00 | 4 | தெரு விளக்கு பராமரிப்பு | 700.00 |
| 5 | சொத்துக்கள் மூலம் வரவு | 750.00 | 5 | பொது சுகாதாரம் மற்றும் மலேரியா | 650.00 |
| 6 | குடிநீர் விநியோக வரவு | 1,800.00 | 6 | கல்வி | 108.00 |
| 7 | குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை | 300.00 | 7 | நூலக வரி | 125.00 |
| 8 | கட்டணங்கள் மூலம் வரவு | 550.00 | 8 | வாகனங்கள் பராமரிப்பு | 325.00 |
| 9 | அரசு நிதி உதவி மற்றும் மான்யம் | 4,000.00 | 9 | கட்டடங்கள் பராமரிப்பு | 105.00 |
| 10 | இதர வரவுகள் | 300.20 | 10 | இதர செலவுகள் | 226.00 |
| | **மொத்த வரவினம்** | **11,500.20** | | **மொத்த செலவினம்** | **11,889.00** |

# சேலம் மாநகராட்சி

## 2009–2010ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடு

## மூலதனக் கணக்கு

| வ. எண் | விபரம் | வரவுகள் (ரூபாய் இலட்சத்தில்) | வ. எண். | விபரம் | செலவுகள் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | நமக்கு நாமே திட்டம் | 50.00 | 1 | பொது பணிகள் | 200.00 |
| 2 | சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மான்யம் | 200.00 | 2 | மக்கள் குறைதீர்க்கும் நாள் நிவாரணப்பணி | 150.00 |
| 3 | சிறப்பு சாலைக்கடன் மற்றும் மான்யம் | – | 3 | நமக்கு நாமே திட்டம் | 50.00 |
| 4 | மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி பணி ஊக்க நிதி | 102.90 | 4 | சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மான்யம் | 194.00 |
| 5 | வெள்ள நிவாரணம் | 100.00 | 5 | 12வது நிதிக் குழு | 153.00 |
| 6 | வாம்பே திட்டம் | – | 6 | மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி பணி ஊக்க நிதி | 52.00 |
| 7 | மழைநீர் சேகரிப்பு மான்யம் | 50.00 | 7 | வெள்ள நிவாரணம் | 100.00 |
| 8 | குடிநீர் விநியோகம் | 34.00 | 8 | வாம்பே கழிப்பிடம் | 40.00 |
| 9 | திடக்கழிவு மேலாண்மை | 153.00 | 9 | மழைநீர் சேகரிப்பு பணிகள் | 50.00 |
| 10 | திருமணி முத்தாறு திட்டம்– நிலை 2 | 2,700.00 | 10 | குடிநீர் விநியோகம் | 310.00 |
| 11 | பாதாள சாக்கடை திட்டம் | 5,500.00 | 11 | திடக்கழிவு மேலாண்மை | 153.00 |
| 12 | தனிக்குடிநீர் திட்டம் | 5,500.00 | 12 | திருமணி முத்தாறு திட்டம் | 2,550.00 |
| 13 | நவீன இறைச்சிக்கூடம் | – | 13 | பாதாள சாக்கடை திட்டம் | 5,000.00 |
| 14 | இடுகாடு, சுடுகாடு, தகனமேடை | – | 14 | தனிக்குடிநீர் திட்டம் | 5,000.00 |
| 15 | ஐ.எச்.எஸ்.டி.பி | 500.00 | 15 | நவீன இறைச்சிக்கூடம் | 50.00 |
| 16 | பகுதி –II திட்டம் | 100.00 | 16 | இடுகாடு, சுடுகாடு, தகனமேடை | 90.00 |
| 17 | 12வது நிதிக் குழு | 153.00 | 17 | ஐ.எச்.எஸ்.டி.பி. | 475.00 |
| 18 | பேருந்து நிலைய அபிவிருத்தி மானியம் | 200.00 | 18 | போக்குவரத்து அபிவிருத்தித் திட்டம் | 75.00 |
| 19 | வைப்புத் தொகை | 210.00 | 19 | கல்வி | 200.00 |
| | | | 20 | பேருந்து நிலைய அபிவிருத்தித் திட்டங்கள் | 118.00 |
| | | | 21 | தெருவிளக்கு | 92.00 |
| | | | 22 | கடன் திருப்பிச் செலுத்துதல் | 326.00 |
| | | | 23 | முன்பணம் | 210.00 |
| | | | 24 | வைப்புத்தொகை | 224.50 |
| | மொத்தம் | 15,552.90 | | மொத்தம் | 15,862.50 |
| | ஆக மொத்தம் | 27,053.10 | | ஆக மொத்தம் | 27,751.50 |

பற்றாக்குறை – ரூ. 698.40

# சேலம் மாநகராட்சி
# கல்வி நிதி
# 2009–2010ஆம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு

| வரவு | ரூபாய் (ரூ.லட்சத்தில்) | செலவு | ரூபாய் (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| கல்வி வரி | 308.00 | பள்ளிக் கட்டடங்கள் மற்றும் கூடுதல் கட்டடங்கள் | 200.00 |
| முதலீடுகள் மீதான வட்டி மற்றும் வங்கி மூலம் வட்டி | 3.14 | பள்ளி வாடகை | 1.50 |
| | | 10வது, 12வது வகுப்பு இறுதித் தேர்வில் முதல் 25 இடம் பிடித்த மாணவ, மாணவியர்களுக்கு பரிசு, நிதியுதவி வழங்க நிதி ஒதுக்கீடு | 10.00 |
| | | மின்கட்டணம் | 20.95 |
| | | 5வது ஊதியக்குழு நிலுவை | 20.00 |
| | | இதர இனங்கள் | 58.69 |
| **மொத்தம்** | **311.14** | **மொத்தம்** | **311.14** |

# சேலம் மாநகராட்சி
# 2008–2009ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட விவரங்கள்

## வருவாய் கணக்கு

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. 10,332.00 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. 10,332.00 | இலட்சங்கள் |

## மூலதனக் கணக்கு

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. 2,340.00 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. 2,340.00 | இலட்சங்கள் |
| **ஆக மொத்த வரவு** | **ரூ.12,672.00** | **இலட்சங்கள்** |
| **ஆக மொத்த செலவு** | **ரூ.12,672.00** | **இலட்சங்கள்** |

2008–2009ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பற்றாக்குறை ரூ. 645.64 இலட்சங்கள் மாநகராட்சியின் வருவாய் மற்றும் அரசு நிதியுதவிகள் மூலமாக நேர் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

# சேலம் மாநகராட்சி
# 2009–2010ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட விவரங்கள்

## வருவாய் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. | 11,500.20 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. | 11,889.00 | இலட்சங்கள் |

## மூலதனக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மொத்த வரவினம் | ரூ. | 15,552.90 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | ரூ. | 15,862.50 | இலட்சங்கள் |

| | | | |
|---|---|---|---|
| ஆக மொத்த வரவு | ரூ. | 27,053.10 | இலட்சங்கள் |
| ஆக மொத்த செலவு | ரூ. | 27,751.50 | இலட்சங்கள் |
| பற்றாக்குறை | ரூ. | 698.40 | இலட்சங்கள் |

இந்த நிதி நிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பற்றாக்குறையை சேலம் மாநகராட்சியின் வருவாயை மேம்பாடு செய்தும், நிதி ஆதாரங்களை கூடுதலாகப் பெற்றும், சிக்கன நடவடிக்கை மூலமும் சரிசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## வருவாய் கணக்கு

**வரியினங்கள் (Tax)**

**சொத்துவரி**

| | | |
|---|---|---|
| மொத்த வரிவிதிப்புகள் எண்ணிக்கை | – | 1,63,497 |
| ஜனவரி 2009 முடிய வசூல் | – ரூ. | 873.33 இலட்சங்கள் |
| 2008–2009க்கு எதிர்பார்க்கப்படும் வசூல் | – ரூ. | 1,975.00 இலட்சங்கள் |
| 2009–2010க்கு உத்தேசிக்கப்படும் வசூல் | – ரூ. | 2,300.00 இலட்சங்கள் |

சொத்துவரியை பொறுத்த வரையில் நடப்பு 2008–2009ஆம் நிதியாண்டில் ஜனவரி 2009 வரை கடந்த ஆண்டை விட கூடுதலாக 4,521 சொத்து வரி விதிப்புகள் புதியதாக நிர்ணயம் செய்யப்பட்டு இதன் காரணமாக ரூ.37.82 இலட்சம் கூடுதல் வருவாய் பெறப்பட்டுள்ளது.

சொத்துவரி குறித்து மாநகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டு நிலுவையிலிருக்கும் வழக்குகளை சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொண்டு முடிவுக்கு கொண்டுவந்து வரி வசூலில் இன்னும் முன்னேற்றம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணினி வரி வசூல் மூலம் பொது மக்கள் தாங்களாக வரியை செலுத்தக்கூடிய நிலைக்கு வந்துள்ளனர் என்பது ஏழு கணினி வரி வசூல் மையங்கள் மற்றும் இரண்டு நடமாடும் கணினி வரி வசூல் வாகனங்கள் ஆகியவற்றில் வசூலாகும் வரி மற்றும் வரியில்லாத் தொகைகளிலிருந்து தெரியவருகிறது என்பதையும் பொதுமக்களிடம் வரி செலுத்துவதில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

01.04.2008 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட பொது சீராய்வு மூலமாக சேலம் மாநகராட்சிக்கு சொத்து வரியில் ரூ.470.50 இலட்சங்கள் கூடுதல் வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**சொத்து வரி பெயர் மாறுதல் சிறப்பு முகாம்**

சேலம் மாநகராட்சியில் 60 கோட்ட பொதுமக்களின் வசதிக்காக சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு பெயர் மாறுதல் செய்ய **சேலம் மாநகராட்சியின் வரலாற்றில் முதன் முறையாக ஒரு சிறப்பு முகாம் 23.02.2009ஆம் தேதி** மைய அலுவலகத்தில் நடத்தப்பட்டது. இதில் 807 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 547 பெயர் மாறுதல் உத்திரவுகள் உடனடியாக அன்றைய தினமே வழங்கப்பட்டன. மீதி விண்ணப்பங்கள் மீது ஆய்வு செய்து உரிய உத்திரவு பிறப்பிக்க நடவடிக்கையிலுள்ளது. இது போன்று சிறப்பு முகாம் வரும் நிதியாண்டிலும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தொழில் வரி**

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி 2009 முடிய வசூல் | – | ரூ. 179.01 | இலட்சங்கள் |
| 2008–2009க்கு எதிர்பார்க்கப்படும் வசூல் | – | ரூ. 250.00 | இலட்சங்கள் |
| 2009–2010க்கு உத்தேசிக்கப்படும் வசூல் | – | ரூ. 300.00 | இலட்சங்கள் |

**கேளிக்கை வரி**

| | | | |
|---|---|---|---|
| 2008–2009ஆம் ஆண்டிற்கு வரவு எதிர்பார்ப்பு | – | ரூ. 180.00 | இலட்சங்கள் |
| 2009–2010ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வரவு | – | ரூ.200.00 | இலட்சங்கள் |

**வரியில்லாயினங்கள் (Non-Taxes)**

**முத்திரைதாள் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| 2008–2009ஆம் ஆண்டிற்கு வரவு | – | ரூ. 975.00 | இலட்சங்கள் |
| 2009–2010ஆம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் வரவு | – | ரூ.1,000.00 | இலட்சங்கள் |

**குடிநீர் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| மொத்த குடிநீர் இணைப்புகள் எண்ணிக்கை | – | 78,714 | |
| ஜனவரி 2009 முடிய வசூல் | – | ரூ. 871.33 | இலட்சங்கள் |
| 2008–2009க்கு எதிர்பார்க்கப்படும் வரவு | – | ரூ. 1,700.00 | இலட்சங்கள் |
| 2009–2010க்கு உத்தேசிக்கப்படும் வரவு | – | ரூ. 1,800.00 | இலட்சங்கள் |

குடிநீர் கட்டணமாக பெறப்படும் வருவாயானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாநகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய பராமரிப்புக் கட்டணம், மின்கட்டணம், இதர செலவினங்கள் ஆகியவையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது குறைவாக உள்ளதால் இதன் காரணமாக ஏற்படும் பற்றாக்குறையை சரி செய்ய பொது நிதியிலிருந்து நிதி மாறுதல் செய்யப்பட்டு செலவிடப்படுகிறது.

<u>கல்வி நிதி</u>

<u>கல்வி வரி</u>

| | | |
|---|---|---|
| 2008–2009–க்கு எதிர்பார்க்கப்படும் வரவு | – ரூ. 285.00 | இலட்சங்கள் |
| 2009–2010–ல் உத்தேசிக்கப்படும் வரவு | – ரூ. 311.14 | இலட்சங்கள் |

2008–2009ஆம் நிதியாண்டில் மாநகராட்சி பள்ளிகளின் அபிவிருத்திக்காக 21 பணிகளுக்கு ரூ.271.65 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது. இது முந்தைய ஆண்டுகளை விட கூடுதலாகும்.

இதே போல் 2009–2010ஆம் நிதியாண்டிலும் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் 2008–2009ஆம் வருடத்திற்கான வரவு–செலவுத் திட்ட அறிவிப்பு எண். 24–ல் தெரிவித்தபடி 2008–2009ஆம் கல்வியாண்டிலிருந்து 10வது வகுப்பு மற்றும் 12வது வகுப்பு இறுதித் தேர்வில் மாநில அளவில் முதல் 25 இடம் பெறும் மாணவ, மாணவியருக்குச் சான்றிதழ், பரிசு வழங்குதல் மற்றும் இவர்களில் வசதியற்றவர்களுக்கு மேல் கல்வி பயில நிதியுதவி வழங்கவும் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள கார்பஸ் நிதிக்கு (Corpus Fund) மாநகராட்சியின் பங்களிப்புத் தொகையாக ரூ.5.00 இலட்சம் மாநில நிதிக்குழு மான்யத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

2008–2009ஆம் கல்வியாண்டில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு இறுதி தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவியரின் சாதனைகளைப் பாராட்டி கடந்த நிதி நிலை அறிக்கையில் தெரிவித்தபடி மாநகராட்சியின் சார்பாக முதல் பரிசாக ரூ. 5,000/–ம், இரண்டாம் பரிசாக ரூ.3,000/–ம் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.1000/–மும் 15.08.2008ம் தேதி சேலம் மாநகராட்சியின் சார்பில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

**மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால்** கடந்த ஆண்டு சட்ட மன்றத்தில் அறிவித்தபடி நகராட்சி / மாநகராட்சி பள்ளிகளில் 2007–2008ஆம் ஆண்டில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளில் அரசு இறுதித் தேர்வில் மாநில அளவில் முதல் 25 இடங்களைப் பெற்ற மாணாக்கர்களை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு கடந்த 30.06.2008ந் தேதி சென்னை தலைமைச் செயலகத்தில் **மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால்** ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் தலா ரூ.10,000/– ரொக்கப்பரிசும், பாராட்டுச்சான்றிதழும் வழங்கப்பட்டது. இதில் சேலம் மாநகராட்சி பள்ளிகளிலிருந்து ஆறு மாணவ, மாணவியர் இடம் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2007–2008ஆம் ஆண்டு மாநில அளவில் +2 தேர்வில் முதல் 25 இடங்களை பெற்ற மாணவ, மாணவியர்களில் சேலம் மாநகராட்சி சார்பில் ஐந்து மாணவ, மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு மொத்தத்தில் 20 சதவீதம் இடம் பெற்றுள்ளனர் என்பது பாராட்டுக்குரியதாகும்.

மேற்படி +2 தேர்வில் பரிசு பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு உயர்கல்வி பயில கல்லூரி கட்டணம், உணவுக்கட்டணம், விடுதிக்கட்டணம், நூலகக்கட்டணம், சீருடை கட்டணம், கல்லூரி ஆய்வுக்கட்டணம் போன்ற அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள்

நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் ஏற்கப்பட்டு அதற்கான காசோலைகளை 25.01.2009ந் தேதி **மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால்** சென்னை தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டது. மேலும் இவர்களது உயர்கல்வி படிப்புக்காலம் வரை கல்விக்கட்டணத்தை அரசே வழங்க உள்ளது என்பதையும் இங்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதே போன்று நடப்பு ஆண்டிலும் தொகை ஒதுக்கீடு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இம்மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்கப்படுத்தும் வகையிலும், இம்மாநகராட்சி பள்ளிகளின் கல்வித்தரத்தினை உயர்த்திட உறுதுணையாக இருக்கும் வகையிலும் மாநகராட்சி நிர்வாகம் செயல்பட்டு வருகிறது .

<u>சொத்துக்கள் மூலம் வரவு</u>

<u>குத்தகை இனங்கள் ( ஆண்டு உரிமையாணை இனங்கள்)</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 2008–2009க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் | – | ரூ. | 324.65 | இலட்சங்கள் |
| 2009–2010க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் | – | ரூ. | 350.00 | இலட்சங்கள் |

<u>மாநகராட்சிக் கடைகள்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 2008–2009க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் | – | ரூ. | 375.35 | இலட்சங்கள் |
| 2009–2010க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் | – | ரூ. | 400.00 | இலட்சங்கள் |

<u>கட்டணங்கள் மூலம் வருவாய்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 2008–2009க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் | – | ரூ. | 510.00 | இலட்சங்கள் |
| 2009–2010க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் | – | ரூ. | 550.00 | இலட்சங்கள் |

<u>அரசு நிதியுதவி மற்றும் மானியம்</u>

| | | | |
|---|---|---|---|
| 2008–2009க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் | – | ரூ. 3,550.00 | இலட்சங்கள் |
| 2009–2010க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் | – | ரூ. 4,000.00 | இலட்சங்கள் |

<u>இதர வருவாய்</u>

| | | | |
|---|---|---|---|
| 2008–2009க்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் | – | ரூ. 272.00 | இலட்சங்கள் |
| 2009–2010க்கு உத்தேசிக்கப்படும் வருவாய் | – | ரூ. 300.20 | இலட்சங்கள் |

# பொறியியல் பிரிவு

## மக்கள் குறை தீர்க்கும் நாள் நிவாரண நிதி

2008–2009ஆம் நிதியாண்டில் மக்கள் குறை தீர்க்கும் நாட்களில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தேவையின் அடிப்படையில் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

2009–2010ஆம் நிதியாண்டில் மக்கள் குறை தீர்க்கும் மனுக்களில் சுட்டிக்காட்டப்படும் அடிப்படை வசதிகளுக்காக நடவடிக்கை மேற்கொள்ள ரூ. 150.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து அவ்வப்போது தேவைக்கேற்ப பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## சாலை, வடிகால் பணிகள்

சேலம் மாநகராட்சிக்கு இரண்டாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரில் மண்சாலைகளை தார்சாலைகளாக மாற்றுதல், மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் கான்கிரீட் சாலை அமைக்க ஒதுக்கப்பட்ட தொகை ரூ.412.00 இலட்சத்தில் 2008–2009ஆம் ஆண்டில் 51 எண்ணிக்கையிலான பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 44 பணிகள் ரூ.326.32 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

2009–2010ஆம் நிதியாண்டில் மண்சாலைகளை தார்சாலைகளாக மாற்றும் திட்டத்தின் கீழ் 15.00 கி.மீ. மண் சாலைகளை தார்சாலைகளாக மாற்ற ரூ.270.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>பொது நிதியில் அடிப்படை வசதிப்பணிகள் (சாலை, வடிகால், சிறுபாலம் மற்றும் கட்டடம்)</u>

2008–2009 ஆம் நிதியாண்டில் அடிப்படை வசதிப்பணிகளான சாலை, வடிகால், சிறுபாலம், கட்டடங்கள் அமைக்கவும் மற்றும் பராமரிக்கவும் 311 எண்ணிக்கையிலான பணிகளுக்கு ரூ.3,065.15 இலட்சத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பொது நிதியிலிருந்து அடிப்படை வசதி பணிகளுக்காக 01.04.2008 முதல் நாளது தேதி வரை ரூ.1,285.26 இலட்சத்திற்கான பணிகள் முடித்து தொகை வழங்கப்பட்டுள்ளது.

2009–2010ஆம் ஆண்டில் பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிப் பணிகள் மேற்கொள்ள ரூ.2,000.00 இலட்சம் ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>தெருவிளக்குகள்</u>

சேலம் மாநகராட்சியில் 2008–2009ஆம் ஆண்டில் 28,525 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் (சோடியம் ஆவி விளக்கு, குழல் விளக்கு, உயர்மின் கோபுர விளக்கு மற்றும் டி5 விளக்கு) தனியார் மூலம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் தொடர்ந்து தனியார் மூலம் பராமரிப்பு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2009–2010ஆம் நிதியாண்டில் மின்சார தேவையை குறைக்கும் வண்ணம் டி5 விளக்குகள் பிரதான சாலைகளில் 300 எண்ணிக்கையில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளில் கூடுதலாக 1,000 குழல் விளக்குகள் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கவும், மேலும் உயர்மின் கோபுர விளக்குகள் பிரதான சாலை சந்திப்புகளில் ரூ.27.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>புதிய, பழைய பேருந்து நிலையம் அபிவிருத்தி செய்தல்</u>

சேலம் மாநகருக்கு வருகை தரும் பொதுமக்கள் மற்றும் பயணிகளின் வசதியை கருத்தில் கொண்டு 2008–2009ஆம் ஆண்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், அமரும் இருக்கைகள், நடைபாதை வசதி, ஊனமுற்றோர் அமருவதற்கு சாய்தள வசதி, மின்வசதிகள் மற்றும் கைபேசிகளை சார்ஜ் செய்வதற்கான சார்ஜர் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

2009–2010ஆம் ஆண்டில் புதிய பேருந்து நிலையத்தில் கூடுதலாக பயணிகள் அமரும் இருக்கை வசதிகளை மேம்படுத்தவும், தேவையான இடங்களில் மின்விசிறி அமைக்கவும், சுற்றுப்புற சுகாதாரத்தை சிறப்பான முறையில் பராமரிக்கவும், கழிப்பிடங்களை நவீன முறையில் அபிவிருத்தி செய்திடவும் ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து அமைக்கப்பட உள்ளது.

2009–2010ஆம் நிதியாண்டில் மாநகரத்தின் மையத்தில் அமைந்துள்ள நகரப் பேருந்து நிலைய உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ரூ.130.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>கணினிமயமாக்குதல்</u>

சேலம் மாநகராட்சியில் அலுவலக நடைமுறைகளை விரைவாக செயல்படுத்திட கணினிமயமாக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தற்பொழுது நான்கு மண்டல அலுவலகங்கள், மூன்று வரிவசூல் மையங்கள், மற்றும் இரண்டு நடமாடும் கணினி வசூல் வாகனம் மூலம் பொதுமக்கள் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டி வரிகள் மற்றும் குடிநீர் கட்டணங்களை சிரமமின்றி எந்தப்பகுதியிலும் செலுத்தும் வசதிகள் நடைமுறையில் உள்ளது. சேலம் மாநகராட்சிக்கென தனி வளைதளம் அமைக்கப்பட்டு மாநகராட்சி சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களும் அதில் சேமிக்கப்பட்டு பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. (www.salemcorporation.gov.in)

2008–2009ஆம் ஆண்டில் ஏற்கனவே உள்ள ஒரு நடமாடும் கணினி வரி வசூல் வாகனத்துடன் கூடுதலாக மேலும் ஒரு வாகனம் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் பொதுமக்களின் வசிப்பிட தெருக்களுக்கே நேரிடையாக வாகனங்கள் சென்று வரிவசூல் செய்யப்படுகிறது.

கணினிமயமாக்கும் பணிகளுக்காக புதியதாக கணினிகளை வாங்கவும், தேவையான மென்பொருள் அமைத்திடவும் ரூ.15.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2009–2010ஆம் நிதியாண்டில் கூடுதலாக 25 புதிய கணினிகள், பிரிண்டர்கள், தேவையான கணினி பொருட்கள் மற்றும் புதிய மென் பொருள்கள் வாங்கிடவும், கூடுதலாக மூன்று கணினி வாகனம் வடிவமைப்பு செய்திடவும் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## நவீன இறைச்சிக்கொட்டில்

சேலம் மாநகராட்சியில் நவீன இறைச்சிக் கொட்டில் கட்டும் பணி துறைப்பணியாக ரூ.68.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு சிவில் கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி இறைச்சிக் கொட்டிலுக்கு தேவையான இயந்திரங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல்வாழ்வு மையம்

சேலம் மாநகராட்சியின் 57வது கோட்டத்தில் கருங்கல்பட்டி மார்க்கெட் பகுதியில் ரூ.37.00 மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய தாய் சேய் நல விடுதி கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. மேற்படி பணி 2008–2009 ஆம் நிதியாண்டிலேயே பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

2009–2010ஆம் ஆண்டில் கோரிமேடு என்.ஜி.ஜி.ஓ.காலனி பகுதியில் ரூ.34.00 இலட்சம் மதிப்பீட்டில் தாய்சேய் நல விடுதியினை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைகள்

2008–2009ஆம் நிதியாண்டில் அம்மாபேட்டை மாநகராட்சி அண்ணா மருத்துவ மனையை ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இந்த நிதியாண்டிற்குள் இப்பணி முடிக்கப்படும்.

2009–2010ஆம் நிதியாண்டில் உள்கட்டமைப்பு நிதியின் (Infra Gap Fund) மூலம் குமாரசாமிபட்டி, கிச்சிப்பாளையம், மற்றும் செவ்வாய்ப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு தேவையான உபகரணங்கள் வாங்கவும், மருத்துவமனைகளை பழுது பார்க்கவும் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு தகன மேடை

சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான கோட்டம் எண்.12ல் உள்ள காக்காயன் சுடுகாட்டில் பகுதி–II திட்டத்தின் கீழ் அரசு மான்யம் ரூ.20.00 இலட்சம் மற்றும் மாநகராட்சியின் பொது நிதியின் பங்களிப்பு ரூ.78.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.98.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடை அமைத்திடும் பணி விரைவாக நடைபெற்று வருகிறது.

ஈரோடு மாநகராட்சியில் அமைக்கப்பட்டுள்ளது போல் நவீன விஞ்ஞான முறையிலான சுற்றுப்புறசூழல் மாசுபடாத வகையில் பிரேதங்களை எரித்திடும் முறையினை சேலம் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுடன் 27.01.2009 அன்று நேரில் பார்வையிட்டு வரப்பெற்றுள்ளது. மேலும், மேற்படி எரிவாயு தகன மேடையினை பராமரிப்பு செய்ய அரசாணை (நிலை) எண்.122 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 27.06.2008–ல் தனியார் அறக்கட்டளை அமைத்து அதன் மூலம் உள் கட்டமைப்பு செய்து பராமரிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சர்வதேச தரத்திற்கு இணையாக இருக்கும் வகையில் உள் கட்டமைப்பு வசதிகளை வடிவமைப்பு செய்ய தனியார்

வடிவமைப்பு வல்லுநர் நியமனம் செய்யப்பட்டு வடிவமைப்பு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. விரைவில் காக்காயன் சுடுகாடு நவீன வசதிகளுடன் சுமார் ரூ. 500.00 இலட்சம் மதிப்பீட்டில் மாநகர மக்களின் பங்களிப்போடு சர்வதேச தரத்திற்கு இணையான எரிவாயு தகன மேடை அமைக்கப்பட உள்ளது.

<u>மாவட்ட ஆட்சியர் வளர்ச்சி நிதி</u>

சேலம் மாநகராட்சி சீலநாயக்கன்பட்டி ரவுண்டானா மற்றும் தேசிய நெடுஞ்சாலை எண். 7ல் நான்கு வழித்தடங்கள் அமைக்கும் பணிகளும், பாலங்கள் கட்டும் பணி ஆகியவை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் நடைபெறுகிறது. இது சேலம் மாநகரத்தின் வளர்ச்சியில் ஒரு பெரிய மைல் கல் ஆகும். இந்த சாலை பணிகள் நடைபெறுவதால் தேசிய நெடுஞ்சாலை எண். 7ல் உள்ள குடிநீர் வினியோகக் குழாய்களை மாற்றி அமைக்க வேண்டியதாக உள்ளது. இதற்காக இரண்டாவது மாநில நிதிக்குழு மான்யம் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியின் ஒரு பகுதியாக மாவட்ட ஆட்சியர் வளர்ச்சி நிதியில் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க ரூ.52.10 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்திட மாவட்ட ஆட்சியரிடமிருந்து நிதி ஒதுக்கீடு 27.01.2009ல் பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

<u>கல்வி நிதியில் பணிகள்</u>

சேலம் மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள 87 பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிப்பணிகள் மேற்கொள்ள ரூ.271.60 இலட்சத்தில் திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர கடந்த ஆண்டில் **மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின்** ஆய்வின் போது தெரிவித்ததிற்கிணங்க பழைய கட்டடத்தை இடித்து விட்டு 2009–2010ஆம் நிதியாண்டில் கோட்டை மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.86.00 இலட்சம் மதிப்பீட்டில் மாணவர்களுக்கான வகுப்பறைகள் கூடுதலாக கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கோட்டம் எண் 35 புதுத்தெரு எண் 2–ல் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள ஆரம்ப பள்ளிக்கு தேவையான புதிய கட்டடங்கள் ரூ. 40.00 இலட்சம் செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த குடியிருப்பு குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IHSDP)

2009–2010ஆம் நிதியாண்டில் சேலம் மாநகராட்சியின் நான்கு வார்டு அலுவலகங்களுக்கு உட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட 113 குடிசை மற்றும் குடிசை சார்ந்த பகுதிகளில் குடிசைகளே இல்லாத குடியிருப்பை உருவாக்கிட முதற்கட்டமாக 12 குடிசைப்பகுதிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 1006 வீடுகள் ரூ.1,556.24 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் 2008–2009ஆம் ஆண்டிலேயே துவங்க உத்தேசிக்கப்பட்டு அதற்கான துவக்க விழா கடந்த 21.02.2009 அன்று **மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்** தலைமையில் நடைபெற்றது. பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு அன்றைய தினமே அவர்களுக்கு அனுமதி ஆணை வழங்கி சிறப்பித்தார்கள்.

## புதிய அலுவலக கட்டடம்

சேலம் மாநகராட்சி மைய அலுவலக கட்டடம் போதுமான இடவசதி இல்லாத காரணத்தால் மாநகராட்சிக்கு சொந்தமான தொங்கும் பூங்காவில் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டு இருந்தது. அந்த இடத்தில் மாநகரக் காவல் துறை ஆணையர் அலுவலகம் செயல்பட்டு வருவதால் மேற்படி திட்டத்தை செயல்படுத்த இயலவில்லை.

இவ்வாண்டில் மாநகரக் காவல் துறை ஆணையர் அலுவலகம், அத்துறையின் புதிய கட்டடத்திற்கு மாற்றப்படும் என்பதால், 2009–2010ஆம் நிதியாண்டில் நவீன வடிவமைப்புடன் கூடிய சேலம் மாநகராட்சியின் மைய அலுவலக கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## நேரு கலையரங்கம்

1961ஆம் வருடம் திறந்த வெளி கலையரங்கமாக ஆரம்பிக்கப்பட்டு இன்று சுமார் 2500 பேர் அமரக்கூடிய வகையில் உள்ள நேரு கலையரங்கம் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி 2008–2009ஆம் நிதியாண்டிற்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

## போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் செரிரோடு மரவனேரி சந்திப்பில் சாலை மற்றும் வடிகால் அபிவிருத்தி பணிகள் ரூ.74.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.

## நமக்கு நாமே திட்டம்

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பொது மக்களின் பங்களிப்போடு தேவையான அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ள 12 பணிகளுக்கு ரூ. 54.14 இலட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு இவற்றில் ஆறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

1) கோட்டம் எண்.32ல் நகர பேருந்து நிலையம் போஸ் மைதானம், செவ்வாய்பேட்டை லாரி மார்க்கெட் பகுதி, புதிய பேருந்து நிலையம் மற்றும் ஏற்காடு மெயின் ரோடு கோரிமேடு சந்திப்பு ஆகிய பகுதிகளில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.
2) குப்பை சேகரிக்கும் தள்ளுவண்டிகள் 50 வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.
3) கோட்டம் எண்.5 சோனா நகர் குறுக்குத்தெருவில் தார் சாலை போடப்பட்டுள்ளது.

மேலும் மீதமுள்ள ஆறு பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

2009–2010ஆம் நிதியாண்டில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>பாதாள சாக்கடைத் திட்டம்</u>

சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த ரூ.149.39 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரத்தினை தமிழ்நாடு அடிப்படை வசதிகள் உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் மூலம் பெற்று செயல்படுத்த கீழ்கண்டுள்ளவாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

<u>திட்டத்தின் நிதி ஆதாரம்</u>

| | | |
|---|---|---|
| 1. அரசு மானியம்/டி.என்.யூ.டி.பி. III | : | ரூ. 10.00 கோடி |
| 2. மாநகராட்சி மற்றும் பொது மக்களின் பங்கு தொகை | : | ரூ. 78.85 கோடி |
| 3. கடன் (டி.என்.யூ.டி.பி. III) | : | ரூ. 60.54 கோடி |
| மொத்தம் | : | ரூ. 149.39 கோடி |

மேற்படி திட்டத்தில் பாதாள சாக்கடை பணிக்கான குழாய் பதிக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி 28.06.07 பெறப்பட்டது. உலக வங்கி நிறுவனமான டி.என்.யு.டி.பி. ஒப்பந்தப்புள்ளி நமூனாவிற்கு 09.10.07ல் ஆட்சேபணை இன்மை சான்று பெறப்பட்டது .

அதன் அடிப்படையில் பணிகள் நிறைவேற்றிட 22.11.07, 28.12.07, 09.04.08 மற்றும் 11.12.2008 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. முதல் மூன்று அழைப்புகளில் தகுதி வாய்ந்த நிறுவனங்கள் ஏதும் கலந்து கொள்ளவில்லை. இறுதியாக 11.12.2008 அன்று நான்காம் அழைப்பில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள மூன்று நிறுவனங்களும் உரிய தொழில் நுட்பத் தகுதிகளை பெற்றிருப்பதை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக தொழில் நுட்பக் குழு உறுதி செய்துள்ளது. தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக ஒப்பந்தப்புள்ளி வழங்கல் குழுவின் பரிசீலனையில் உள்ள இப்பொருள் குறித்து உரிய முடிவு பெறப்பட்டவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களது பெரும் முயற்சியினால் இத்திட்டத்தில் அமைக்கப்பட இருக்கும் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அணைமேடு, வெள்ளக்குட்டை ஓடை ஆகிய பகுதிகளில் அரசு நிலங்களையும், பாள்குட்டைப் பகுதியில் தனியார் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்திற்கான திருத்திய தொழில்நுட்ப அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமைப் பொறியாளர் அவர்களால் 29.09.2008ல் வழங்கப்பட்டுள்ளது.

இப்பணிகளை நிறைவேற்றிட நான்காம் அழைப்பாக 11.12.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக ஒப்பந்த வழங்கல் குழுவிற்கு பொருள் குறிப்பு வைக்கப்பட்டுள்ளது. குழுவின் முடிவு பெற்றவுடன் உலக வங்கியின் ஒப்புதல் பெற்று விரைவில் பணிகள் துவங்க மேல்நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

## தனிக்குடிநீர் திட்டம்
## திட்ட மதிப்பீடு ரூ.168.00 கோடி
## திருத்திய திட்ட மதிப்பீடு ரூ.283.09 கோடி.

சேலம் மாநகராட்சியில் பொதுமக்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீர் போதுமான அளவு இல்லாத காரணத்தினால் தேவையான அளவு குடிநீர் வழங்கிட தனியான ஒரு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டியதின் அவசியத்தை உணர்ந்த **மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்** இது தொடர்பாக **மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின்** கவனத்திற்கும், **மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தளபதியார் அவர்களின்** கவனத்திற்கும் கொண்டு சென்றார். **மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின்** சீரிய முயற்சியால் அரசு ஆணை எண். 127 நாள் 11.09.2007ல் ரூ.168.00 கோடியில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மதிப்பீடுகளை தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை, அவர்கள் மூலம் உலக வங்கியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. இந்த மதிப்பீடுகளை உலக வங்கி ஆய்வுசெய்து தொழில் நுட்ப ரீதியாக மதிப்பீட்டில் உள்ள பி.எஸ்.சி. (P.S.C. Pipe) குழாய்களுக்கு பதிலாக நீண்ட காலம் பராமரிப்பின்றி பயன்படுத்த ஏதுவாக உள்ள எம். எஸ். (M.S.Pipe) குழாய்களாக மாற்றி அமைத்திட கருத்து வழங்கினார்கள். அதன் அடிப்படையில் திட்ட ஆலோசகரான தமிழ்நாடு தண்ணீர் முதலீட்டு கழக நிறுவனத்தார் (TWIC) உலக வங்கி கருத்தின்படி இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூபாய். 268.69 கோடிக்கு தயாரித்து வழங்கியுள்ளார்கள். மேலும் மேற்கண்ட திருத்திய மதிப்பீடு கீழ்க்கண்ட காரணங்களினால் ரூபாய்.168.00 கோடியில் இருந்து ரூபாய்.283.09 கோடி ஆகியது எனவும் தெரிவித்துள்ளார்கள்.

1. P.S.C. குழாய்களுக்கு பதிலாக M.S. குழாய்களாக மாற்றி அமைக்க மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2. அசல் மதிப்பீடு 2006–2007ஆம் ஆண்டு விலை விகிதத்தின்படி தயார் செய்யப்பட்டுள்ளது. அதனை நடப்பு ஆண்டு 2008–2009ஆம் ஆண்டு விலை விகிதத்தின்படி திருத்தி அமைக்கப்பட்டுள்ளது

இதன் பேரில் திருத்திய திட்ட மதிப்பீடு ரூபாய் 283.09 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கக்கோரி அரசுக்கு பிரேரணைகள் அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் மாமன்றம் தனது 30.01.09ம் தேதிய தீர்மான எண். 439ல் திருத்திய திட்ட மதிப்பீடு ரூபாய். 268.69 கோடியில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கியும், இத்திட்டத்தினை செயல்படுத்த தேவையான நிதியினை UIDSSMT திட்டத்தில் இருந்து வழங்கிட கோரவும் தீர்மானித்துள்ளது. அதன் அடிப்படையில் இவ்வலுவலக 30.01.09ம் தேதிய கடிதம் மூலம் சேலம் மாநகராட்சிக்கு என ஒரு தனிக்குடிநீர் திட்டம் செயல்படுத்த திருத்திய திட்ட மதிப்பீடு தொகை ரூபாய்.283.09 கோடியினை UIDSSMT திட்டத்தில் சேர்த்து வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்பப்பட்டுள்ளன. மேற்படி அனுமதி பெறப்பட்டவுடன் தனிக்குடிநீர் திட்ட பணிகள் துவங்கப்படவுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் போது மாநகராட்சி பகுதிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு தினசரி 135 லிட்டர்கள் வீதம் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரும்பொழுது மாநகராட்சி எல்லைக்குள் தண்ணீர் பற்றாக்குறை என்ற பேச்சிற்கே இடமிருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்

சேலம் மாநகராட்சியில் தற்போது சேகரமாகும் திடக்கழிவுகள் எருமாபாளையம் பகுதியில் கொட்டப்பட்டு வருகிறது. இந்த இடம் சுமார் 28 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இந்த இடத்தில் பல ஆண்டுகளாக குப்பைகள் கொட்டப்பட்டு

வருவதால் சுமார் 20 அடி முதல் 30 அடி உயரத்திற்கு குப்பைகள் தேங்கியுள்ளன. இதனால் சுகாதாரக் கேடுகள் ஏற்படுவதாக கூறி மேற்படி பகுதியில் குப்பை கொட்டுவதற்கு பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். இது தவிர மாநகர எல்லைக்குள் மேலும் மூன்று இடங்களில் குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன. இந்த இடங்கள் போதுமானதாக இல்லை. சேலம் மாநகரம் வளர்ந்து வரும் நகரமாகும். எனவே அதிக அளவில் திடக்கழிவுகள் சேகரமாகின்றன. உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி திடக்கழிவுகளை நவீன விஞ்ஞான முறையில் சேகரித்து கையாள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி மாநகரத்தில் சேகரம் ஆகும் எல்லா திடக்கழிவுகளையும் ஒரே இடத்தில் கொண்டு சென்று நவீன விஞ்ஞான முறையில் குப்பைகளை தரம் பிரித்து கையாள்வதற்கு ஏற்றபடி **மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின்** தீவிர முயற்சியால் செட்டிச்சாவடி ஊராட்சி பகுதியில் சுமார் 100 ஏக்கர் நிலம் புல எண். 6/1 மற்றும் புல எண். 6ல் அரசு ஆணை நிலை எண். 127 வருவாய் (நி.மு.7) துறை நாள் 13.03.2007ன்படி மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்திற்கு செல்லும் அணுகு சாலையை அபிவிருத்தி செய்வதற்காக முதல் கட்டமாக செட்டிச்சாவடி ஊராட்சி பகுதியிலிருந்து செல்லும் சுமார் 2.230 கி.மீ. சாலையை அமைக்க ரூ.2.93 கோடியில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் பெற்று பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் மாநகராட்சி பகுதியில் உள்ள சாலையை அபிவிருத்தி செய்ய ரூ.14.60 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளது.

மேலும் மாநகர பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை நவீன வசதிகளுடன் விஞ்ஞான முறையில் அழிப்பதற்கு கட்டி, இயக்கி, மாற்றுதல் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. மேற்படி பணிக்கு மூன்று நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளன. மேற்படி மூன்று நிறுவனங்களின் திட்ட செயலாக்கத்தினை கண்டறிய குழு ஒன்று மும்பை, இச்சால் கரன்ஜி, பெங்களூர் ஆகிய நகரங்களுக்கு சென்று மேற்படி நிறுவனங்கள் இது போன்று திட்டங்களை செயல்படுத்தும் நிலையினைக் கண்டறிந்து அறிக்கை வழங்கியுள்ளது.

இந்த அறிக்கையின் அடிப்படையிலும், தொழில் நுட்ப தகுதிகளின் அடிப்படையிலும் ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் நடப்பு 2008–2009ஆம் நிதியாண்டிலேயே துவக்கப்பட உள்ளது.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியினால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு எருமாபாளையம், கிச்சிப்பாளையம் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று எருமாபாளையம் குப்பைமேடு மாற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டப்பிரிவு

சேலம் மாநகராட்சியில் அனுமதி பெறாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் அரசாணை (நிலை) எண்.59, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி.1) துறை நாள் 25.07.2006ன்படி, 2006ஆம் ஆண்டில் 909 மனைகள் முறைப்படுத்தப்பட்டு ரூ.1,21,50,686/– வருவாய் பெறப்பட்டுள்ளது. மேலும் அரசாணை (நிலை) எண். 59 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி.1) துறை நாள். 30.04.2007ன்படி, 2007ஆம் ஆண்டில் 2,043 மனைகள் முறைப்படுத்தப்பட்டு வருவாயாக ரூ.1,63,76,841/– பெறப்பட்டது. ஆக மொத்தம் இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 2,952 மனைகள் முறைப்படுத்தப்பட்டு இதன் மூலம் மொத்த வருவாய் ரூ.2,85,27,527/– ஈட்டப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து மேலும் இந்தத் திட்டத்தின் கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்ற நமது மாமன்ற உறுப்பினர்களின் விருப்பத்தை **மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு** தெரிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் தற்பொழுது அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்துவதற்கான கால நீட்டிப்பு செய்து அரசாணை (நிலை) எண்.244 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 05.12.2008ல் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. எனவே தற்போது மீதி உள்ள மனைகளையும் முறைப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் மாநகராட்சிக்கு 2009–2010ஆம் நிதியாண்டில் இந்தத்திட்டத்தின் மூலம் சுமார் ரூபாய் ஒரு கோடி அளவில் வருமானம் கிடைக்கும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கட்டட அனுமதி வழங்கக்கோரி 2008–2009ஆம் ஆண்டில் 1,024 எண்ணிக்கை விண்ணப்பங்கள் பெறப்பட்டு இதன் மூலமாக மாநகராட்சிக்கு ரூ.68.80 இலட்சங்கள் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

<u>பொது சுகாதாரப் பிரிவு</u>

சேலம் மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் இலவச மருத்துவ வசதிகள் வழங்கவும், பொது சுகாதாரப் பணிகளை மேம்படுத்தவும் 2009–2010ஆம் நிதியாண்டில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>மருத்துவ சேவைகள்</u>

சேலம் மாநகராட்சியில் செயல்பட்டுவரும் ஏழு நகர் நல மையங்கள், நான்கு அலோபதி மருந்தகங்கள் மற்றும் ஐந்து தாய் சேய் நல விடுதிகள் மூலமாக 2008ஆம் ஆண்டில் சுமார் 2,22,000 நபர்களுக்கு அலோபதி சிகிச்சை வழங்கப்பட்டது. 3,832 பிரசவங்கள் பார்க்கப்பட்டன. 12,365 குழந்தைகளுக்கு தடுப்பூசி மருந்து வழங்கப்பட்டது. மேலும், இந்திய முறை மருத்துவத்தில் சித்தா, யுனானி மற்றும் ஆயுர்வேத மருந்தகங்கள் மூலம் சுமார் 69,000 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

2008–2009ஆம் ஆண்டிற்கு மருந்துகள் வாங்குவதற்கென ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலமாக அலோபதி மருந்துகளும், இந்திய மருத்துவ முறை சிகிச்சைக்கான மருந்துகள் டேம்ப்கால், இம்ப்காப்ஸ் ஆகிய நிறுவனங்களிடமிருந்து வாங்கப்பட்டுள்ளன. 2009–2010ஆம் ஆண்டிற்கு புறநோயாளிகள் சிகிச்சைக்கு மருந்துகள் வாங்குவதற்காகவும், இதர உபகரணங்கள் வாங்குவதற்காகவும் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2007–0008ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தபடி சேலம் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் மருத்துவ அலுவலர்களில் சிறந்த முறையில் பணியாற்றிய நான்கு மருத்துவ அலுவலர்களுக்கு கடந்த 26.01.2009 அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில் ரூ. 2,500/– வீதம் பண முடிப்பும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது. மருத்துவ அலுவலர்களை ஊக்குவிக்க 2009–2010ஆம் நிதி ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

## வரும்முன் காப்போம் திட்டம்

தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய கிராமப்புற, நகர்ப்புற மக்களுக்குத் தரமான மருத்துவ சிகிச்சை அளிக்கும் சிறப்புத் திட்டமான **மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின்** வரும்முன் காப்போம் திட்டத்தின் கீழ் இதுவரை 13 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. 15,826 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். 700 நபர்கள் மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டு பயன் அடைந்து வருகின்றனர். 2009–2010 ஆம் ஆண்டில் 15 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## இளம் சிறார்களுக்கான இருதய பாதுகாப்பு மற்றும் அறுவை சிகிச்சைத் திட்டம்.

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின்** சிறப்புத்திட்டமான இளம் சிறார்களுக்கான இருதய பாதுகாப்பு மற்றும் அறுவை சிகிச்சைத் திட்டம் **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால்** 24.06.2008 அன்று சேலம் சிறுமலர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஏழை எளிய குடும்பங்களில் உள்ள பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இருதய நோய்களுக்கான பரிசோதனைகள் செய்யப்பட்டு அறுவை சிகிச்சைத் தேவைப்படும் குழந்தைகளுக்கு அரசு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் மருத்துவ மனைகளில் முற்றிலும் இலவசமாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் இருதய நோயால் பாதிக்கப்பட்ட 61 குழந்தைகள் கண்டறியப்பட்டு முதற்கட்ட பரிசோதனையில் 22 குழந்தைகள் அறுவை சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டனர். இதற்கென ஒதுக்கப்பட்ட ரூ.5.00 இலட்சம் நிதியிலிருந்து இதுவரை ஆறு குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 16 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பள்ளி சிறார் நல வாழ்வுத் திட்டத்தின் கீழ் சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 165 பள்ளிகளில் பயிலும் 1,07,026 மாணவ, மாணவிகளுக்கு ஆண்டுதோறும் முழு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்கப்படும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்

பொது சுகாதாரத்துறையில் **மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின்** புகழ் வாய்ந்த திட்டமான டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஏழை கர்ப்பிணித் தாய்மார்களின் பொருளாதார சுமையைக் குறைக்கவும், தேவையான ஓய்வெடுக்கவும், ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுத்து அதனை நல்ல முறையில் பராமரிக்கவும் உதவிடும் நோக்கில் முதல் இரண்டு கர்ப்பத்திற்கு நிதி உதவியாக பிரசவத்திற்கு முன் மூன்று மாதங்களுக்கும், பிரசவத்திற்கு பின் மூன்று மாதங்களுக்கும் ரூ. 3,000/– வீதம் இரண்டு தவணைகளாக மொத்தம் ரூ. 6,000/– வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2008–2009ஆம் நிதி ஆண்டில் ரூ.2,48,89,000/– நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதில், 4,133 கர்ப்பிணி தாய்மார்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 2009–2010ஆம் நிதியாண்டிற்கு 4500 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ.2.70 கோடி நிதி உதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது தவிர தேசிய மகப்பேறு நிதி உதவித் திட்டமான ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின் கீழ் மத்திய அரசு மூலமாக ரூ.8.00 இலட்சம் நிதி உதவி பெறப்பட்டு 1,334 பயனாளிகளுக்கு ரூ. 600/– வீதம் முதல் இரண்டு பிரசவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தில் 1,500 பயனாளிகளுக்கு ரூ.9.00 லட்சம் நிதி உதவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

**தாய் சேய் நலம் மற்றும் மருத்துவமனைகளை அனைத்து வசதிகளுடன் மேம்படுத்துதல்**

கடந்த 2008–2009ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, சேலம் மாநகரில் உள்ள ஏழை, எளிய மக்கள் பயன்படுத்தும் மாநகராட்சி மருத்துவமனைகளில் மருத்துவ வசதிகளை மேம்படுத்த நவீன கருவிகள் வாங்கவும், படுக்கை வசதிகள், பிரசவத்திற்கான சிறப்பு வசதிகள், பச்சிளம் குழந்தைகளுக்கான சிகிச்சை பிரிவு உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடுதலாக மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களை நியமனம் செய்து 24 மணி நேரமும் செயல்படும் அவசர சிகிச்சை பிரிவு ஏற்படுத்தப்படுமென தெரிவித்துள்ளதற்கிணங்க, தற்போது அம்மாபேட்டை பகுதியில் செயல்பட்டு வரும் அண்ணா மருத்துவமனை வளாகத்தில் அமைய உள்ள புதிய மருத்துவமனைக்கு ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. இதன் மூலம் பொது மக்களுக்கு கூடுதல் மருத்துவ சிகிச்சை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இதே போன்று கிச்சிப்பாளையம், செவ்வாய்ப்பேட்டை மற்றும் குமாரசாமிபட்டி பகுதிகளில் செயல்படும் மருத்துவமனைகளிலும் புதிய கட்டடங்கள் கட்டி மேற்படி கூடுதல் வசதிகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2009–2010ஆம் நிதியாண்டில் தேசிய நகர்ப்புற நலத் திட்டம் (National Urban Health Mission) மூலம் சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கு தரமான மருத்துவ வசதிகள் கிடைத்திடவும், தாய் மற்றும் சேய் இறப்பு விகிதத்தை குறைக்க தேவையான உள் கட்டமைப்பு வசதிகளை மாநகராட்சி பகுதிகளில் செயல்படும் அனைத்து மருத்துவமனைகளிலும் ஏற்படுத்த தேவையான திட்டம் தயார் செய்யப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்ய முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் வரும் நிதியாண்டில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

துப்புரவு பணியாளர் நலன்

மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து துப்புரவுப் பணியாளர்களின் சுகாதார மேம்பாட்டிற்காகவும், வேலைப்பளுவை எளிதாக்கவும், நன்மதிப்பை கொடுப்பதற்கும், பாதுகாப்பிற்காகவும் 2008–2009 ஆம் நிதியாண்டில் துப்புரவுப் பணியாளர்களுக்கு ஒளி பிரதிபலிக்கும் மேற்சட்டை, சுவாசக் கவசம், கையுறைகள், மழைக் கோட்டுகள் மற்றும் தொப்பிகள் ஆகியவைகள் வாங்கவும், சாக்கடை சுத்தம் செய்யும் பணியாளர்களுக்கு ஷூட்ஸ்களும், லாரி பணியாளர்களுக்கு தலைக் கவசம் போன்ற உபகரணங்களும் வாங்குவதற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 20.00 லட்சம் மதிப்பீட்டில் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கி வழங்கும் பணி நிறைவேற்றப்படும் நிலையில் உள்ளது.

துப்புரவு பணியாளர்களை கௌரவிக்கும் பொருட்டு சேலம் மாநகராட்சியின் கடந்த வரவு செலவு திட்டத்தில் அறிவித்தவாறு 2008 மே 2ஆம் தேதியன்று துப்புரவு பணியாளர்கள் தினம் மிகச் சிறப்பாக சேலம் மாநகராட்சி நேரு கலையரங்கத்தில் கொண்டாடப்பட்டு சிறந்த துப்புரவு பணியாளர்களாக ஒன்பது பேர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா ரூ.1,000/–வீதம் பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும் அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கும் தன்சுத்தம், சுற்றுப்புறத்தூய்மை மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்தும் முறைகள் குறித்து விழிப்புணர்வு பயிற்சிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

உணவுக் கலப்பட தடுப்புச் சட்டம்

உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய உணவுப் பொருட்களில் ஏதேனும் கலப்படம் உள்ளதா எனக் கண்டறிய இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் 10 உணவு ஆய்வாளர்கள் மூலம் 321 மாதிரிகள் எடுக்கப்பட்டு அதனை பரிசோதனைக்கு உட்படுத்தி, அதில் கலப்படம் என தெரியவந்த

49 நபர்கள் மீது பொது சுகாதாரம் மற்றும் உணவு, கலப்பட தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளில் அவ்வப்போது திடீர் ஆய்வுகள் மேற்கொண்டு சுகாதாரமற்ற முறையில் விற்கப்படும் உணவுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>மலேரியா நோய் ஒழிப்பு மற்றும் கொசு ஒழிப்புத் திட்டம்</u>

சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் தேசிய நகர்ப்புற மலேரியா நோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொது மக்கள் ஒத்துழைப்புடன் சுற்றுப்புறத் தூய்மை, சுகாதாரம், கொசுக்களால் பரவும் நோய்கள் மற்றும் அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. 2008–2009 ஆம் ஆண்டில் வாகனத்தின் மூலம் இயங்கும் ஒரு புதிய சூப்பர் பாக் இயந்திரம், 10 கை புகை தெளிப்பான் இயந்திரங்கள், கொசு ஒழிப்பு இரசாயனங்கள் மற்றும் எரிபொருள் செலவுகளுக்காக ரூ. 40.00 இலட்சம் செலவிடப்பட்டு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2009–2010 ஆம் ஆண்டுக்கு கொசு ஒழிப்பு பணிக்காக சேலம் மாநகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் உள்ள கழிவறை கசிவு நீர் காற்றுப்போக்கிகளுக்கு கொசு வலை இலவசமாக வழங்குவதற்காகவும், இரசாயனம் மற்றும் எரிபொருள் வாங்கவும் ரூ. 75.00 லட்சம் மதிப்பீட்டில் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

<u>துப்புரவுப் பணி</u>

சேலம் மாநகரை குப்பையில்லா மாநகராக மாற்றிடவும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திடவும், தற்போது 39 கோட்டங்களில் மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் மூலமும், 21 கோட்டங்களில் தனியார் நிறுவனம் மூலமாகவும் துப்புரவுப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநகரின் அனைத்து பகுதிகளிலும் தினசரி சேகரமாகும் சுமார் 335 மெட்ரிக் டன் குப்பைகளை தோற்ற நிலையிலேயே மக்கும் மற்றும் மக்காத வகைகளாகப் பிரித்து வீடுகள் மற்றும் கடைகள் தோறும் பச்சை

மற்றும் சிவப்பு கலன்களில் வாங்கி சேகரித்தும் மற்றும் தெருக்களில் சேரும் திடக்கழிவுகளை சுத்தப்படுத்தியும் லாரிகள் மற்றும் டிராக்டர்கள் ஆகிய வாகனங்கள் மூலம் உரக்கிடங்கிற்கு அனுப்பி நவீனமுறைப்படி திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தெருக்களில் உள்ள கழிவு நீர் வாய்க்கால்களில் அடைப்புகளை நீக்கி குப்பை, சேறு போன்றவற்றைச் சுத்தம் செய்து கழிவு நீர் தேங்காமல் சீராக வெளியேற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 2008–2009ஆம் ஆண்டில் 150 டம்பர் தொட்டிகள் வாங்க உத்தேசிக்கப்பட்டு 29 டம்பர் தொட்டிகள் ரூ. 22.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டு பயனுக்கு கொண்டுவரப்பட்டது. வரும் நிதியாண்டில் புதியதாக 50 டம்பர் தொட்டிகள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. விரைவில் நவீன வாகனங்கள் (Compactor) வாங்கி அதன் மூலம் குப்பைகள் அகற்றவும், வீடுகள் தோறும் குப்பைகள் சேகரிக்க கை தள்ளுவண்டிகள் வாங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<u>பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம்</u>

<u>நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல்</u>

சேலம் மாநகராட்சி பகுதிகளில் நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த தெருவில் சுற்றித்திரியும் நாய்கள் மற்றும் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களில் இதுவரை 160 நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டு வெறிநோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தொடர்ந்து இத்திட்டம் சிறப்பாக செயல்பட சேலம் பிராணிகள் வதை தடுப்புச் சங்க வளாகத்தில் ரூ. 1.50 இலட்சத்தில் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்கான உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2009–2010ஆம் நிதியாண்டில் சேலம் மாநகரில் உள்ள அனைத்து நாய்களுக்கும் பாதுகாப்பான முறையில் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டு வெறிநோய் தடுப்பூசி போட அனுமதிக்கப்பட்ட ரூ. 26.36 இலட்சம் நிதி முழுவதுமாக செலவிட நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**<u>சொர்ண ஜெயந்தி / நகர்ப்புற வேலைவாய்ப்பு / பெண்கள் நலத் திட்டம்</u>**

மத்திய அரசும், தமிழக அரசும் இணைந்து மாநகர மக்களில் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்பவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திட பல்வேறு திட்டங்களை வழங்குகின்றன. அவற்றில் சொர்ண ஜெயந்தி எனப்படும் பொன்விழா கடன் திட்டம், நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம், நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் போன்றவைகள் மிகவும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் கீழ் தகுதியுள்ள அனைவருக்கும், குறிப்பாக பெண்களுக்குரிய வேலைவாய்ப்பு பயிற்சிகள் அளித்தல், சுய உதவிக் குழுக்கள் அமைத்து செயல்படுதல் என பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மாநகராட்சி சார்பாக பயிற்சி நிறுவனம் ஏற்படுத்தி அதன் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் பெண்களுக்கு தையல், கணினி, அழகுக் கலை, கைவினைப் பொருட்கள் தயாரிப்பு போன்றவற்றில் பயிற்சி வழங்கவும், அதனை படிப்படியாக தொழில்நுட்ப கல்லூரியாக விரிவாக்கம் செய்ய 2008–2009 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதன்படி சூரமங்கலம் உழவர் சந்தை அருகில் ஒரு தொழிற் பயிற்சி நிறுவனம் **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால்** 01.11.2008ல் நடைபெற்ற சேலம் மாநகராட்சியின் உள்ளாட்சி தினவிழாவில் துவக்கப்பட்டு தற்போது தையல், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

2008–2009ஆம் நிதி ஆண்டில் நகர்ப்புற மக்களின் தனி நபர் கடனுக்காக ரூ.12.65 இலட்சம் மான்யம் ஒதுக்கப்பட்டு 405 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது. நகர்ப்புற வேலைவாய்ப்பு பயிற்சி வழங்கும் திட்டத்தில் ரூ. 13.76 இலட்சம் ஒதுக்கப்பட்டு 688 நபர்களுக்கு கணினி பயிற்சி, அழகுக்கலை, ஓட்டுனர், தையல், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, சமையற்கலை, கைபேசி போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இப்பயிற்சி காலத்திற்கு ரூ. 2,000/– வீதம் பயிற்சி தொகை வழங்கப்படும்.

2009–2010 ஆம் நிதியாண்டில் இப்பயிற்சிக்கு நிதியுதவி ரூ. 20.00 இலட்சமாக உயர்த்தப்பட்டு அதிக பயனாளிகள் பயன்பெற திட்டமிடப்பட்டுள்ளது. நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 38 குழுக்களுக்கு 50 சதவிகிதம் மானியத்துடன் கடன் வழங்கப்பட உள்ளது.

மாநகரில் 1,455 சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவர்களுக்கு கடந்த 26.08.2008 மற்றும் 27.08.2008 ஆகிய தேதிகளில் நடைபெற்ற விழாக்களில் **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும்** 200 குழுக்களுக்கு ரூ. 20.00 லட்சம் சுழல் நிதி வழங்கினார்கள். மீதமுள்ள தகுதியான அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் வரும் நிதியாண்டில் சுழல்நிதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

<u>2008–2009 ஆம் ஆண்டில் வழங்கப்பெற்ற மான்யம் மற்றும் கடன் தொகை விவரம்</u>

<u>1. நகர்ப்புற மக்களின் தனி நபர் கடன்</u>

| பயனாளிகளின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 15% |
|---|---|---|
| 405 | ரூ. 84,33,000/– | ரூ. 12,65,000/– |

<u>2. நகர்ப்புற வேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம்</u>

| பயனாளிகளின் எண்ணிக்கை | பயிற்சிக்கான தொகை |
|---|---|
| 688 | ரூ. 13,76,000/– |

3. நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்

| குழுக்களின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 50% |
|---|---|---|
| 136 | ரூ. 75,90,000/– | ரூ. 37,95,000/– |

4. நகர்ப்புற மகளிர் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள்

| குழுக்களின் எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை | மானியத் தொகை |
|---|---|---|
| 357 | 3579 | ரூ. 35,79,000/– |

2009–2010 ஆம் ஆண்டின் உத்தேச மதிப்பீடு விபரம்

1. நகர்ப்புற மக்களின் தனி நபர் கடன்

| பயனாளிகளின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 15% |
|---|---|---|
| 750 | ரூ. 3,75,00,000/– | ரூ. 56,25,000/– |

2. நகர்ப்புற வேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம்

| பயனாளிகளின் எண்ணிக்கை | பயிற்சிக்கான தொகை |
|---|---|
| 2,300 | ரூ. 46,00,000/– |

3. நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்

| குழுக்களின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 50% |
|---|---|---|
| 150 | ரூ. 3,00,00,000/– | ரூ. 1,50,00,000/– |

## 4. நகர்ப்புற மகளிர் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள்

| குழுக்களின் எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை | மானியத் தொகை |
|---|---|---|
| 500 | 5,000 | ரூ. 50,00,000/- |

## சொர்ண ஜெயந்தி திட்டம் – பூங்காக்கள் பராமரிப்பு

சேலம் மாநகராட்சியில் உள்ள பூங்காக்களை சுய உதவிக் குழுக்கள் மூலம் பராமரிக்கவும், மேலும் பொது உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் புதிய பூங்காக்கள் அமைத்து பராமரிக்கவும் 2009–2010ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## ஈமச்சடங்கு மான்யம்

சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்கு கீழே வசிக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு இறப்பு நேரிட்டால் ஈமச்சடங்கு செலவினங்களுக்காக மான்யத் தொகையாக ரூ. 500/– வீதம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து இத்திட்டம் மாநகராட்சியில் உள்ள அனைத்து ஏழை எளிய மக்களுக்கும் கிடைத்திட தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

## பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்குதல்

சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் 63 எண்ணிகையிலான பிறப்பு, இறப்பு சான்று வழங்கும் மையங்கள் மூலமாகவும், சேலம் மாநகராட்சி மைய அலுவலகத்தில் உள்ள பிறப்பு, இறப்பு சான்று வழங்கும் மையம் மூலமாகவும் ஆண்டு தோறும் சுமார் 24 ஆயிரம் பிறப்பு மற்றும் சுமார் 6 ஆயிரம் இறப்பு

நிகழ்வுகளும் பதிவுகள் செய்யப்பட்டு புதிய சான்றிதழ்களும், நூறு வருடங்களுக்கும் மேலாக பாதுகாக்கப்பட்டு வரும் பழைய பதிவேடுகள் மூலமாக மைய அலுவலகத்திலும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 19.09.2008 மற்றும் 20.09.2008 ஆகிய இரண்டு நாட்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மைய அலுவலகத்தில் சேலம் மாநகராட்சியில் முதன்முறையாக நடத்தப்பட்ட பிறப்பு, இறப்பு சான்று வழங்கும் சிறப்பு முகாமில் 4,019 பிறப்பு சான்றிதழ்களும், 142 இறப்பு சான்றிதழ்களும் இலவசமாக வழங்கப்பட்டன. பொதுமக்கள் பெரிதும் பயன்பெற்று மிகுந்த வரவேற்பை பெற்ற இதே போன்ற சிறப்பு முகாம்கள் தொடர்ந்து 2009–2010ஆம் நிதியாண்டிலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நிகழும் பிறப்பு, இறப்பு நிகழ்வுகளுக்கு உடனடியாக கணினி மூலம் சான்றிதழ்கள் வழங்க பிறப்பு, இறப்பு பதிவு அலுவலகம் துவக்கப்பட்டு 1.11.2008 முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், இதே போன்று சேலம் மாநகராட்சியில் தற்போதுள்ள பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் வழங்கும் பணிகள் அனைத்தும் முற்றிலும் கணினிமயமாக்கப்பட்டு கணினி மூலம் சான்றிதழ்கள் தாமதமின்றியும், உடனடியாகவும் வழங்க வரும் நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

## <u>எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோய் தடுப்புத் திட்டம்</u>

சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோய் தடுப்பு பணிகளுக்காக தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கத்துடன் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும், ஐ.சி.டி.சி. மையங்கள் மூலம் இலவச பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் இதுவரை 7,500 நபர்களுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டு, ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. சேலம் புதிய பேருந்து நிலையத்தில் புதியதாக ஐ.சி.டி.சி மையம் துவக்கிப் பொது மக்களுக்கு இலவச பரிசோதனை மற்றும் ஆலோசனைகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

<u>வேலைவாய்ப்பு மற்றும் காலி பணியிடங்களை நிரப்புதல்</u>

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்** கடந்த ஆட்சியில் நேரடி நியமனத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை முற்றிலும் நீக்கி அரசாணை (டி) எண். 41 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந4) துறை நாள் 02.02.07ல் ஆணை பிறப்பித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் இம்மாநகராட்சியில் காலி பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட **மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்** ஆணை பிறப்பித்ததின் பேரில் 14 இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் பணியிடங்களும், 4 மருந்தாளுநர் பணியிடங்களும், 3 பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பணியிடங்களும் மற்றும் 4 மகப்பேறு உதவியாளர் பணியிடங்களும் நிரப்பப்பட்டன. அதற்கான நியமன ஆணைகளை **மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்** தகுதியானவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்கள்.

மேலும் மீதமுள்ள காலிபணியிடங்களை பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தவிர சேலம் மாநகராட்சியில் திருமணிமுத்தாறு திட்டம், பாதாள சாக்கடை திட்டம், தனிகுடிநீர் திட்டம், சிறப்பு சாலைத்திட்டம், குடிசை பகுதி மேம்பாட்டுத்திட்டம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், நவீன இறைச்சிகொட்டில் திட்டம், ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற மேம்பாட்டுத்திட்டம், மற்றும் எரிவாயு தகனமேடை போன்ற புதிய திட்டங்களை நிறைவேற்றிட ஏதுவாக அரசாணை (இருபதாண்டு) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.5) துறை நாள். 14.05.08ன்படி 1 கண்காணிப்பு பொறியாளர், 2 செயற் பொறியாளர்கள், 4 உதவி செயற் பொறியாளர்கள், 8 உதவி பொறியாளர்கள், 2 உதவி படவரைவாளர் மற்றும் 12 தொழில் நுட்ப உதவியாளர்கள் ஆக மொத்தம் 29 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. மேற்படி புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட 29 பணியிடங்களைத் திட்டப்பணிகள் துவங்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு நியமித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணியிடங்களை பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

<u>புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்</u>

சேலம் மாநகராட்சியில் பணியாற்றி வரும் 2,297 அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் உட்பட அனைவரும் பயன்பெறும் வகையில் தமிழக அரசால் அரசாணை எண்.74 நிதி (ஊதியம்) துறை நாள். 28.04.08ன்படி புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது திட்ட விவரம் பின்வருமாறு.

1) இத்திட்டம் கடந்த 30.06.2008 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

2) பணியாளரின் பிரதி மாத ஊதியத்திலிருந்து ரூ.25/– பிடித்தம் செய்யப்படுகிறது.

3) இந்த புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் மாநகராட்சி பணியாளரின் கணவர் / மனைவி மற்றும் திருமணமாகாத மகன் / மகள் ஆகியோர் பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது

4) மாநகராட்சி பணியாளர் மற்றும் அவர் தம் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ரூபாய்.2.00 இலட்சம் வரை மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5) மாநகராட்சி பணியாளர்கள் இத்திட்டத்தின் கீழ் மாநகரில் உள்ள முக்கிய மருத்துவமனைகளில் மருத்துவ பயன்பாடு பெற அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்காக மாநகராட்சியின் பங்குத் தொகை மற்றும் சேவை வரியாக பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.257/– வீதம் மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது.

## 2009–2010ஆம் ஆண்டின் புதிய திட்டங்கள்

❖ செட்டிசாவடியில் திடக்கழிவு மேலாண்மைக் களம் அமையவுள்ள இடத்திற்குச் செல்லும் பிரதான சாலையை ரூ.296.00 இலட்சம் மதிப்பீட்டில் அகலப்படுத்தி அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

❖ கோரிமேடு முதல் செட்டிசாவடி திடக்கழிவு மேலாண்மைக் களம் செல்லும் வழியில் 2.95 கி.மீ. நீளம் தார்சாலை ரூ.152.50 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி செய்து அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

❖ டி.வி.எஸ். அல்ராஜ் ஓடையை ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

❖ ஒவ்வொரு மண்டலத்திலும் தலா ஒன்று வீதம் நான்கு சமுதாயக்கூடங்கள் மொத்தம் ரூ.80.00 லட்சம் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி முதல் கட்டமாக வருகின்ற நிதியாண்டில் 2வது கோட்டம் மாரியம்மன் கோவில் பின்புறத்திலும், 4வது கோட்டம் தென் அழகாபுரத்திலும், 9வது கோட்டம் வாய்க்கால் பட்டறையிலும் மற்றும் 50வது கோட்டம் சௌடேஸ்வரி நகரிலும் இந்த சமுதாயக் கூடங்கள் கட்டப்படும்.

❖ கோட்டை பழைய மார்க்கெட் சாலையை ரூ.23.90 இலட்சம் மதிப்பீட்டில் அகலப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

❖ அம்மாப்பேட்டை மண்டலம் 35வது கோட்டத்தில் புதியதாக பள்ளிக் கட்டடம் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

❖ சேலம் நகரில் ஐந்து இடங்களில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் மண்சாலைகளை தார்சாலைகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- மயானங்களை அபிவிருத்தி செய்து, காம்பவுண்டு சுவர், கேட் முதலியன அமைத்து சீரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- மாநகராட்சி பகுதிகளில் பொது மக்கள் நலனைக் கருதி வாகன நிறுத்துமிடங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- வருவாய் தரக்கூடிய வகையில் முக்கிய இடங்களில் புதியதாக கடைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- வீராணம் மெயின் ரோடு பகுதியில் கடைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.
- சூரமங்கலம் மீன் மார்க்கெட்டை நவீனப்படுத்தி கடைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- வ.உ.சி.மார்க்கெட், மீன் மார்க்கெட், ஆகியவற்றை அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- குமாரசாமிபட்டி ராம் நகர் பகுதியில் புதிய மீன் மார்க்கெட் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- இரும்பாலை சாலை மற்றும் பெங்களுர் சாலையில் மாநகராட்சி எல்லை வரை டி5 விளக்குகள் (தெரு விளக்குகள்) பொருத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- செட்டிசாவடி செல்லும் சாலையில் டி5 விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- தனியார் பங்களிப்புடன் திருமணிமுத்தாறு கரையில் தேவையான இடங்களில் பூங்காக்கள், வாகனம் நிறுத்துமிடம், சாலை வசதி, நடைபாதை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- திருமணி நாளங்காடியை அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- நகரில் பொதுமக்கள் கூடுமிடங்களில் இலவச சிறுநீர் கழிப்பிட வசதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
- சேலம் நகரப் பேருந்து நிலையத்தில் சுமார் ரூபாய்.1.25 கோடி செலவில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- போஸ் மைதானத்தை அழகுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- நகர பேருந்து நிலையமருகிலுள்ள சைக்கிள் ஸ்டேண்ட் முன் பகுதியில் கடைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- பேருந்து நிறுத்தங்களில் தனியார் பங்களிப்புடன் நிழற்கூடம் (Shelters) ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- நகரில் முக்கிய இடங்களில் பொது மக்கள் கூடும் இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- பேருந்து நிலையங்களில் தனியார் பங்களிப்புடன் பேருந்து வழித்தடங்கள் மற்றும் புறப்படும் நேரம் குறித்த கால அட்டவணை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- மாநகராட்சியில் அனைத்து மேல்நிலை நீர் தேக்கத்தொட்டிகளுக்கு வர்ணம் பூச உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- 44வது கோட்ட துப்புரவு ஆய்வாளர் அலுவலகம் அமைந்துள்ள காலியிடத்தில் குடிநீர் மேல்நிலைத்தொட்டி ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- செவ்வாய்பேட்டை அய்யாசாமி சாலையில் உள்ள தாய் சேய் நல விடுதிக்கு ரூ. 30.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

- மாநகராட்சி மருத்துவமனை / மகப்பேறு இல்லங்களுக்கு அரசின் அனுமதி பெற்று ஒப்பந்த அடிப்படையில் மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது

- கொசுக்களை ஒழிக்க அனைத்து வீடுகள் மற்றும் கட்டடங்களில் உள்ள செப்டிக் டேங்க் காற்று போக்கிகளில் இலவசமாக வலை பொருத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- நான்கு நவீன குப்பை அகற்றும் வாகனங்கள் (காம்பாக்டர்) வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- மாநகராட்சியின் அனைத்து மகப்பேறு மருத்துவமனைகளிலும் கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- இருதய பரிசோதனைக்காக இ.சி.ஜி. கருவிகள் மாநகராட்சியின் ஐந்து மருத்துவமனைகளில் வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- ஆறு மகப்பேறு மையங்களில் ஸ்கேன் வசதி ஏற்படுத்தி, கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஆறு மாத கர்ப்ப காலத்திற்குள் ஒரு முறையேனும் ஸ்கேன் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

- மாநகராட்சியின் முக்கிய மருத்துவமனைகளில் சர்க்கரை நோய், கொழுப்புச்சத்து இருதய நோய் தடுப்பு நடவடிக்கைக்காக ரத்தப்பரிசோதனை மையம் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- மணியனூர், சிவதாபுரம், செவ்வாய்பேட்டை மற்றும் கிச்சிப்பாளையத்திலுள்ள மாநகராட்சி மருத்துவமனைகளை ரூ.1.00 கோடி செலவில் புதிய கட்டடம் மற்றும் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

- துப்புரவு பணியாளர்களுக்கு வருகைப்பதிவேடு பராமரிக்கும் பொருட்டு கணினி வருகை பதிவேடு இயந்திரங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- மண்டல அளவில் பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- மகளிர் சுய உதவி குழுக்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

- குகை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

- மாநகராட்சியின் அனைத்து பள்ளிகளிலும் மாணவ, மாணவியர் அமர்ந்து கல்வி பயில நாற்காலிகள், பெஞ்சுகள், அடிப்படை வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் வர்ணம் பூச உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- மாநகராட்சி பள்ளிகளில் மின் கட்டணம் செலுத்த வசதியில்லாத நலிவடைந்த பள்ளியின் மின் கட்டணத்தில் ஒரு பகுதியை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- சேலம் மாநகராட்சியின் உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் எஸ்.எஸ்.எல்.சி மற்றும் +2 இறுதித் தேர்வில் 100% தேர்ச்சி பெறும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர் மற்றும் பள்ளி ஆசிரியர்களை பாராட்டி கௌரவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- சேலம் மாநகராட்சியின் ஏழு மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் மூன்று உயர்நிலைப்பள்ளிகளில் அரசு இறுதித்தேர்வில் ஒவ்வொரு பள்ளியிலும் முதல் மூன்று இடம் பெற்று தேர்ச்சி பெறும் மாணவ, மாணவியரை கௌரவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

❖ மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் உடல் ஊனமுற்ற மாணவ, மாணவியருக்கு தேவையான உபகரணங்களை கல்வி நிதியிலிருந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

❖ மாநகராட்சி பள்ளிகளில் +2 முடித்து உயர்கல்வி பயில விரும்புவோருக்கு வங்கிகள் மூலம் கல்விக்கடன் ஏற்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

❖ கொண்டலாம்பட்டி மண்டல அலுவலகத்திற்கு கூடுதலாக ஒரு கணினி வரி வசூல் மையம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

❖ ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு நடமாடும் கணினி வரி வசூல் வாகனம் என்ற அடிப்படையில் மேலும் மூன்று நடமாடும் கணினி வரி வசூல் வாகனம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

❖ மாநகராட்சியின் அனைத்துப் பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் போட்டோவுடன் கூடிய அடையாள அட்டை (Photo Identification Card) வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

❖ மாநகரின் முதன்மையான பெரிய சாலைகள் அனைத்திலும் ஏற்கனவே உள்ள சோடியம் ஆவி விளக்குகளை அப்புறப்படுத்தி அந்த இடங்களில் டி5 விளக்குகள் பொருத்திடவும், சோடியம் ஆவி விளக்குகளை மாநகரின் உட்புறம் உள்ள சாலைகளுக்கு மாற்றிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

❖ உயர்ந்து வரும் மின்கட்டணத்தை கட்டுப்படுத்திட நவீன தானியங்கி தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மின்விளக்குகளை பராமரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

❖ முதற்கட்டமாக மாநகராட்சியின் குடிசைப்பகுதிகளில் தேவைக்கேற்ப 30,000 லிட்டர் முதல் 60,000 லிட்டர் வரை கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- மக்கள் பிரதிநிதிகளான மாமன்ற உறுப்பினர்கள் எளிதாக மக்களை சந்திக்கும் வகையில் ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு அலுவலகம் கட்டவும் இத்திட்டத்தினை படிப்படியாக செயல்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- போடிநாய்க்கன்பட்டி, ஆண்டிப்பட்டி பகுதிவாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான குறுகிய பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் சில காரணங்களால் செயல்படுத்த இயலவில்லை. வரும் நிதியாண்டில் இரயில்வே துறையுடன் இணைந்து செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- அம்மாப்பேட்டை குமரகிரி ஏரியை அழகுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகரத்திற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் நோக்கில் **மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தளபதியார் அவர்களும்** வேண்டிய நிதியினை வாரி வழங்கி வருகிறார்கள். இந்த நிதியினை பெறுவதற்கான செயல்களில் தாயுள்ளத்தோடு ஈடுபட்டு வருபவர் நமது மாவட்டக் காவலர் **மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்** என்பதை நாம் நன்கறிவோம்.

" உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல் "

என்ற அய்யன் வழியில் வந்த துன்பத்தை நீக்கி, இனித் துன்பம் வராதபடி காக்கின்ற வலிமையும் திறமையும் நிரம்பப் பெற்றுள்ள நம் தலைவர்களின் நல்லாசி தொடர்ந்து நமக்கு இருப்பதால் இந்த மாநகர மக்களுக்கு என்றும் நன்மைகளே கிட்டும் என்பதில் ஐயமில்லை. இப்படி நமக்காக உழைத்து வருகின்ற சட்டமன்ற **பொன்விழா நாயகர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், உள்ளாட்சியில் நல்லாட்சி நாயகர் மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் வீரபாண்டியார் அவர்களுக்கும்** என் நன்றிதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர இந்த மாநகராட்சியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு நமது பல வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்திட தொகுதி மேம்பாட்டு நிதியை வழங்கி நமக்கு வழிகாட்டியாகவும் உற்ற துணையாகவும் இருந்து வருகின்ற **வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், பனமரத்துப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும்,** இதனை முறைப்படுத்தும் நல் அலுவலராய் இருந்து செயல்படுகின்ற மரியாதைக்குரிய **மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும்** எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மக்களுக்கான உயரியப் பணியில் எனக்கு உறுதுணையாக இருந்து செயல்படுகின்ற

**வணக்கத்திற்குரிய துணைமேயர்** அவர்களுக்கும்,
**மரியாதைக்குரிய மாநகராட்சி ஆணையாளர்** அவர்களுக்கும்,
**மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர்** அவர்களுக்கும்,
**மண்டல குழுத் தலைவர்களுக்கும்,**
**மாநகராட்சி எதிர் கட்சித் தலைவர்** அவர்களுக்கும்,
**மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர்களுக்கும்,**
**மாமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும்,**

**மாநகராட்சி செயற்பொறியாளர், மாநகர நல அலுவலர், உதவி ஆணையாளர்கள், இதர அலுவலர்கள், பணியாளர்கள்** என அனைவருக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது தவிர மாநகராட்சி நிர்வாகத்திற்கு பெரிதும் துணை நிற்கும் **காவல்துறை ஆணையாளர்** மற்றும் **காவல்துறை அலுவலர்கள்,** அரசின் **அனைத்துத் துறை அலுவலர்கள், பத்திரிக்கை** மற்றும் **தொலைக்காட்சி துறை சகோதரர்கள்** அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையை தயாரிப்பதற்கு எனக்கு உறுதுணையாக இருந்த வரி மற்றும் நிதி நிலைக்குழு தலைவர் **திரு. ஆட்டோ மாணிக்கம் (எ) ப.ராமசாமி அவர்களுக்கும்** எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

" ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை "

என்ற அய்யனின் அறவழியில் மேற்கொண்ட செயல்களை முடிக்க உதவுவது பெரியவர்களான உங்கள் ஆற்றலும், அனுபவமிக்க அரும் பணியும் தான். அப்படிப்பட்ட உங்கள் ஒத்துழைப்போடு சேலம் மாநகர மக்களின் நல்லாதரவினை பெரும் வகையில் தொடர்ந்து பணியாற்றுவோம் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நற்பணியை தொடர்ந்திட துணை நிற்கும் நல்ல உள்ளங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறி எனது நிதி நிலை அறிக்கை உரையினை நிறைவு செய்கிறேன்.

நன்றி. வணக்கம் !

சேலம்
27.02.2009

ஜெ. ரேகா பிரியதர்ஷினி
வணக்கத்திற்குரிய மேயர்
சேலம் மாநகராட்சி.